சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டாரம்

தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மன்றம், தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.P.சாரதா..,

க.எண்.004/2023–24 நாள்.06.09.2024

பொருள்: மனைப்பிரிவு அங்கிகாரம் – சேலம் மாவட்டம் – சங்ககிரி வட்டம் – தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மஞ்சக்கல்பட்டி கிராமம் – சர்வே எண்.60/3-ல் 4.00 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது இறுதி ஒப்புதல் வழங்கி – உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை: 1.திரு.N.தேவராஜ் மற்றும் நால்வர்கள், எண்.3.3.25/15B, சங்ககிரி, சேலம் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம் நாள்.02.09.2024.

2.சார்பதிவாளர் , சார்பதிவாளர் அலுவலகம் சங்ககிரி அவர்களின் பத்திர பதிவு ஆவண எண்.3312, 3313/19.08.2024.

3.சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். SLM/ 7UDYNJJG/30866/2024/TCP. நாள்.02.09.2024.

4.அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017.

5.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020, நாள்.24.12.2020.

6.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/90/எல்எல்1, நாள்.07.11.1992.

7.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012/எல்எல்2, நாள்.19.04.2012.

8.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/எல்எல்1, நாள்.08.09.2017.

9.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/TCP2, நாள்.13.03.2019, 14.10.2019, 05.02.2020 மற்றும் 14.08.2021.

10.அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.02.2020.

11.அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020.

12.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.29503/2023/NDP, நாள்.30.07.2024.

13.அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022.

14.மனையிட ஒப்புதல் கட்டணம் 4.00 ஏக்கர், 72000/– அரசு தலைப்பில் செலுத்திய நாள்.06.09.2024.

15.மனை பிரிவு வளர்ச்சி கட்டணம் (63 x 1000=63000/–) உரிய தலைப்பில் செலுத்திய நாள்.06.09.2024.

16.இதர தொடர்புடைய ஆவணங்கள்.

*****

உத்தரவு–

பார்வை 3–ல் கண்ட உதவி இயக்குநர் சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அனுமதி கடிதத்தின் படி, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திற்கு உட்பட்ட தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மஞ்சக்கல்பட்டி கிராமம் சர்வே எண்.60/3-ல் 4.00 ஏக்கர் (16187.44 ச.மீட்டர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவிற்கு சேலம் மாவட்ட, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனை பிரிவிற்கான ம.வ/சேமா எண் SWP/DTCP/SALEM/LAYOUT NO 191/2024 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், சேலம் மாவட்டம், தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மஞ்சக்கல்பட்டி கிராமம் சர்வே எண்.60/3-ல் 4.00 ஏக்கர் (16187.44 ச.மீட்டர்) பரப்பளவில் உள்ள நிலமானது சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பு

4.00 ஏக்கர் (16187.44 ச.மீட்டர்)

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 4–ல் காணும் அரசாணையின் படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்கெட் வால்யூம், கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்ததின்படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| (DPC-0217-60-800-AS22709) | உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட தொகை ரூ.72000/– நாள்.06.09.2024<br>STATE BANK OF INDIA<br>Sankari. |

தற்சமயம், மேற்படி சங்ககிரி வட்டத்திற்கு உட்பட்ட தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி கிராம சர்வே எண்.60/3-ல் 4.00 ஏக்கர் (16187.44 ச.மீட்டர்) பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மன்றம், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்தரவுடப்படுகிறது.

**நிர்ணயிக்கப்படும் நிபந்தணைகள்**

1. பார்வை 3–ல் காணும் உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.
3. ஒப்புதல் வழங்ப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்ட ண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில், அரசு மற்றும் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுபட்டவர் ஆவார்.
6. பத்திரபதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாகும்.
7. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8. விற்பணை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும், பத்திரபதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரபதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறனாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

P. Saradha

தலைவர்,

ஊராட்சி மன்றம்,

தேவண்ணகவுண்டனூர்

தலைவர்

தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி

சங்ககிரி

பெறுதல்–

திரு. N.தேவராஜ் மற்றும் நால்வர்கள்,
எண்.3.3.25/15B,
சங்ககிரி,
சேலம் மாவட்டம்

நகல்–

3. உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களுக்கு.
4. சார்பதிவாளர் சங்ககிரி அலுவலகம், சேலம் மாவட்டம்.